**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.116/2024**

Deposition of Witness of PW7

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | சபரிமலை | Calling | : |
| Father/Husband's Name | : | பரமசிவம் | Age | : |
| Village | : | | | : |
| Taluk | : | | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 18th நவம்பர் 2025.

1, 2 ம் எதிரிகள் ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் லக்காபுரம் காமராஜர் நகரில் வசித்து வருகிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று வீட்டில் வசித்து வருகிறேன். 17.03.2022-ம் தேதி 46 புதூர் தீரன் நகரில் இருக்கக்கூடிய சாய்பாபா கோவிலில் நான் அன்னதானம் செய்வது வழக்கம் அதேபோல அன்றும் நான் கோவிலில் அன்னதானம் முடிந்து சுமார் மாலை நாலு மணி அளவில் நான் சாய்பாபா கோயில் கோயிலில் சாப்பாடு பரிமாறிக் கொண்டிருந்தபோது அலறல் சத்தம் கேட்டு கோவிலில் இருந்த எல்லாரும் சென்றார்கள் நானும் என்னவென்று பார்ப்பதற்காக சென்றேன். . கோவிலுக்கு வந்த செல்வமணி என்ற பெயருடைய அம்மாவின் நகையை பறித்துக் கொண்டு சென்றதாக சொன்னார்கள் அந்த மணி என்ற அம்மா பதட்டத்தில் இருந்தார் கோவிலில் அழைத்துக் கொண்டு வந்து உட்கார வைத்து தண்ணி கொடுத்து விவரம் கேட்டபோது நகையை பறித்து போனதாக சொன்னார். உடன் இருந்தவர்கள் நகையை பறித்து சென்றவர்களை பிடிப்பதற்காக பைக் எடுத்துக் கொண்டு சென்றார்கள். செல்வமணியை போலீசார் சாய்பாபா கோயிலில் விசாரித்த போது நானும் உடன் இருந்தேன். என்னை போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள் நான் நடந்ததை தெரிந்ததை சொன்னேன்.

(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதின் பேரில் சாட்சி பிறழ சாட்சியாக அறவிக்கப்படுகிறார்)

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.11.19 18:11:39 +0530

கழுத்தில் இருந்த தங்கச் செயினை பச்சை கலர் சட்டை போட்ட நபர் பறித்துக் கொண்டு ஓடிச் சென்று மஞ்சள் நிறமுடைய டியோ கலர் இரு சக்கர வாகனத்தில் ஏறியவுடன் தயாராக இருந்த கருப்பு சட்டை அணிந்த நபர் பைக் எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார் என்றும், அதை பார்த்து நான் அவர்களை துரத்திக் கொண்டு பின்னால் சென்றதாகவும் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது அதற்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.11.19 18:11:44 +0530